(c) whether the High Court has recommended the grant of dress allowance to them; and

(d) if so, the action taken thereon?

நீதித் துறையில் பணியாற்றும் உதவியாளர்கள்.

திரு. சி. ஆர். கோலப்பா (திரு. டி. சந்தோஷம் சார்பில்) : மாண்புமிகு தொழில் அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) நீதித் துறையில் பணியாற்றுகிற உதவியாளர்கள் கருப்பு நிற கோட்டுகளைத் தங்களுடைய அலுவலக நிகராடையாக அணிய வேண்டுமென்று கேட்கப்படுகின்றனரா ?

(இ) இது குறித்து ஆகும் செலவிற்காக படி ஒன்றைக் கொடுக்குமாறு கேட்டு, அவர்கள் சங்கத்திடமிருந்து முறையீடுகள் வந்துள்ளனவா ?

(உ) அவர்களுக்கு உடைப்படி வழங்க உயர்நீதி மன்றம் பரிந்துரை செய்துள்ளதா ?

(எ) ஆமெனில், அது குறித்து எடுக்கப்பட்ட நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. செ. மாதவன் : (அ) இல்லை.

(இ) ஆம்.

(உ) இல்லை.

(எ) இக்கேள்விக்கு இடமில்லை.

Increasing the Procurement Price of Paddy.

* 300 Q.—THIRU A. R. DAMODARAN : Will the Hon. the Minister for Food and Co-operation be pleased to state.—

(a) whether any representation has been made to the Government of India, to increase the procurement price of certain varieties of paddy;

(b) if so, the extent of increase requested for each variety; and

(c) whether any reply has been received and if so, the nature of the same?

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

1974 ஏப்ரல் 10]

நெல் கொள்முதல் விலையை அதிகப்படுத்துதல்.

திரு. ஏ. ஆர். தாமோதரன்: மாண்புமிகு உணவு-கூட்டுறவுத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) சில நெல் ரகங்களின் கொள்முதல் விலையை அதிகப்படுத்த வேண்டுமென இந்திய அரசுக்கு முறையீடு ஏதேனும் செய்யப்பட்டுள்ளதா?

(இ) ஆமெனில், ஒவ்வொரு ரகத்திற்கும், எவ்வளவு அதிகப்படுத்தப்பட வேண்டுமெனக் கோரப்பட்டுள்ளது?

(உ) பதில் ஏதேனும் பெறப்பட்டுள்ளதா? ஆமெனில், அது எத்தன்மை வாய்ந்தது?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: (அ) ஆம்.

(இ) இந்திய அரசினை மோட்டா ரகம், நேர்த்தி ரகம், மிக நேர்த்தி ரகம் ஆகியவற்றின் விலைகளை குவிண்டால் ஒன்றுக்கு முறையே, ரூ. 66, ரூ. 75, ரூ. 78 ஆக நிர்ணயிக்க இவ்வரசு கேட்டுக்கொண்டுள்ளது.

(உ) மோட்டா ரகத்துக்கு குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 66 என்ற விலையை இந்திய அரசு ஏற்றுக்கொண்டது. ஆனால் நேர்த்தி ரக, மிக நேர்த்தி ரகங்களுக்கான விலைகளைக் குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 75, ரூ. 78 ஆக நிர்ணயிக்க ஒப்புதல் அளிக்கவில்லை.

நேர்த்தி ரகம், மிக நேர்த்தி ரகங்களுக்கான விலைகள் முறையே குவிண்டால் ஒன்றுக்கு ரூ. 73, ரூ. 75 ஆக இருக்கலாமென்று இந்திய அரசு தெரிவித்துள்ளது. இவ்வரசின் கருத்தினை வலியுறுத்தி மத்திய அரசுக்கு மீண்டும் கடிதம் எழுதப்பட்டிருக்கிறது.

திரு. கே. ராஜாராம்: தலைவரவர்களே, தற்போது பொன்னி, ஐ.ஆர். 20 போன்ற மிக நேர்த்தியான ரகங்கள் என்ன விலைக்கு வாங்கப்படுகின்றன?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, பொன்னி, ஐ.ஆர். 20 போன்ற வகைகள் மிக நேர்த்தியான நெல் எனக் கருதி அந்த விலைக்கு எடுத்துக்கொள்ள வேண்டுமென்று பல முறை வலியுறுத்தி வருகிறோம். இது வரையில் நேர்த்தியான ரகம் என்ற அளவில்தான் வாங்கிக்கொண்டிருக்கிறோம்.

THIRU A. R. DAMODARAN: Sir, may I know the date on which this representation was made by the Government of Tamil Nadu?

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: 6—10—1973.

திரு. எம். சங்கரலிங்கம்: தலைவரவர்களே, மத்திய அரசு சாதாரண மக்கள் பயன்படுத்தும் மோட்டா ரக அரிசி விலையை உயர்த்துவதற்கு ஒப்புக் கொண்டிருப்பதாகவும் ஆனால் உயர்குடி மக்கள் உண்ணும் நேர்த்தி ரக அரிசிக்கு விலையை உயர்த்துவதற்கு மறுப்பு தெரிவித்திருப்பதாகவும் சொல்லப்படு கிறது. இதற்குக் காரணம் என்ன என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: அதற்குக் காரணம் அவர் களைத்தான் கேட்க வேண்டும்.

Thiru A. R. DAMODARAN: Sir, the representation was made in October 1973 and subsequent to that, the cost of fertiliser has more than doubled. May I know whether the Tamil Nadu Government have sent a fresh proposal to the Government of India for further revision of price of paddy for procurement?

(பிற்பகல் 4-20)

மாண்புமிகு திரு. மன்னை ப. நாராயணசாமி: தலைவரவர்களே, நாங்கள் ரூ. 75, ரூ. 78 கேட்டிருப்பதை மீண்டும் வலியுறுத்துவதன் நோக்கமே உரங்கள் விலை ஏறியிருப்பது ஒருபுறமிருக்க, உற்பத்தியாளர்களுக்கு அதிக விலை கிடைக்க வேண்டும் என்பதாகும்.

Mr CHAIRMAN: Questions are over.

Thiru G. VASANTHA PAI: Sir, may I ask why there is no Private Members, day during this session? Last year, we had one.

Mr. CHAIRMAN: There is no private Members day during a Budget Session.

Thiru G. VASANTHA PAI: Sir, anyway, may I have your leave to move a Private Member's Resolution felicitating you on your 69th birthday tomorrow?

Unstarred Questions.

Hindi as a medium of examination for recruitment to Public Services.

*24 Q.—Thiru S. VELLAPANDIAN: Will the Hon. the Chief Minister be plesaed to state—

(a) whether the Central Government have requested the State Government to introduce Hindi as a medium for Public Service Commission Examinations in this State; and

(b) if so, the action taken in the matter?